[திரு. சி. ஞானசேகரன்] [2009 ஜூலை 1

நிலங்களையெல்லாம் நாசம் செய்து, காளியம்மாள் என்பவரை மிதித்துச் சாகடித்து, இன்னும் நான்கு பேர் இப்போது படுகாயமடைந்து ஆஸ்பத்திரியில் இருக்கிறார்கள். ஏற்கெனவே இதுகுறித்த பிரச்சினையை நான் தினந்தோறும் தங்களிடம் கேட்டுக்கொண்டிருக்கிறேன். இதனால் எங்களுடைய பகுதியிலே மிகவும் பதட்டமான ஒரு நிலை இருக்கிறது. ஆகவே, இதுகுறித்து தாங்கள் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறீர்கள் என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

(ஊ) சிவகங்கை, கண்டாங்கிப்பட்டி, இந்திரா நினைவுக் குடியிருப்பு வீடு இடிந்தது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன்.

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 27-6-2009 ஆம் தேதி அதிகாலை சிவகங்கை தொகுதியிலே கண்டாங்கிப்பட்டி என்ற கிராமத்தில், இந்திரா நினைவுக் குடியிருப்பு வீட்டிலே படுத்துத் தூங்கிக்கொண்டிருந்த கணேசன், வயது 40 மற்றும் மாயன், வயது 65 ஆகிய இரண்டு பேர்கள்மீதும் அந்த வீடு இடிந்து விழுந்து, அந்த இடத்திலேயே மரணமடைந்திருக்கிறார்கள். இரண்டு தலித் சகோதரர்களுடைய குடும்பங்களிலும், கணேசனுக்கு இரண்டு மகள்கள், ஒருவர் பிளஸ் 2, இன்னொருவர் பிளஸ் 1 படிக்கிறார்கள்; சரவணன் என்ற பத்தாவது படிக்கிற குழந்தையும் இருக்கிறது. மாயன், அவருடைய மனைவி 60 வயதைத் தாண்டியவர் இருக்கிறார். அந்த இரண்டு குடும்பங்களும் எந்தவிதமான அடிப்படை வசதியும் இல்லாத நிலையில், அந்தக் குடும்பங்களுக்குத் தலா மூன்று இலட்சம் ரூபாய் நிதி உதவியை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்க வேண்டுமென்று கேட்டு, கணேசனுடைய மனைவிக்கு நமது சமூக நலத் துறையின்மூலமாக வேலைவாய்ப்பையும் உருவாக்கித் தரவேண்டும். அதோடு, இன்றைக்குத் தமிழகத்திலே இருக்கிற இந்திரா நினைவுக் குடியிருப்பு வீடுகள் எல்லாம் பழுதடைந்திருக்கிற நிலையில் சட்டமன்ற உறுப்பினர்கள் நிதி ஒதுக்கீடு செய்தாலும், அதை முழுமையாகச் செய்து தரமுடியாத நிலையில், இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட அந்த வீடுகளை எல்லாம் பராமரிப்புச் செய்வதற்கு உடனடியாக இந்த ஆண்டு நிதி ஒதுக்கீடு செய்து தரவேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்களையும், நமது மாண்புமிகு துணை முதல்வர் அவர்களையும் உங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.